RLTOP. 01/2021

Dated.22.08.2023

Name : சண்முகபெருமாள் (PW2)

Time: 12.30 PM

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. தாவா சொத்திற்கு அருகில் உள்ள கடையில் நான் இறைச்சி வியாபாரம் செய்து வருகிறேன். தாவா சொத்தில் எதிர்மனுதாரர் இறைச்சி வியாபாரம் செய்து வருகிறார்.

2. மனுதாரரான டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் கமுதி கிளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் மனுதாரர் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் செயல்பட்டு வந்தது. தற்சமயம் மேற்படி வங்கியை மனுதாரர் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு இடத்திற்கு மாற்றி செயல்பட்டு வருகிறது.

3. கமுதியில் செயல்பட்டு வரும் அஞ்சல் அலுவலகம் மனுதாரர் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் செயல்பட்டு வந்தது. தற்சமயம் மேற்படி அஞ்சல் அலுவலகம் மனுதாரர் டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு இடத்திற்கு மாற்றி செயல்பட்டு வருகிறது.

4. டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட கடைகளில் வாடகைக்கு இருப்போருக்கு கடைகளில் ஏதேனும் சீரமைப்பு செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட வேறு இடங்களில் உள்ள சொத்துக்களில் மாற்று ஏற்பாடு செய்து தருவது வழக்கம் என்றால் வேறு இடங்களில் கடைகள் இருந்தால் மாற்றி தருவார்கள்.

5. என்னையும் காலி செய்ய கூறியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாக கூறவில்லை.

6. என்னையும் எதிர்மனுதாரரையும் காலி செய்ய சுமார் 2 வருடங்களுக்கு முன்பு கேட்டுக்கொண்டார்கள். நானும் குருராஜனும் பராமரிப்பு பணி தொடங்கும் போது காலி செய்து கொடுப்பதாக கூறினோம். நாளது தேதி வரை எந்த பராமரிப்பு பணியும் மேற்கொள்ளவில்லை என்பதால் காலி செய்யவில்லை.

7. குருராஜனின் குடும்பத்தையும், அவரது மைத்துனர் மேகராஜனின்

குடும்பத்தையும் எங்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

8. குருராஜன் நடத்தி வரும் கடையை காலி செய்ய வேண்டும் என்பதற்காக பெயரளவில் என்னையும் காலி செய்யுமாறு கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி காரணங்களால் தான் மேற்படி தாவா சொத்தில் பராமரிப்பு பணிகள் இன்று வரை செய்யப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல.

9. மேகராஜன் நடத்தி வரும் கடைக்கு அருகில் புவனேஷன் என்பவர் கடையை நடத்தி வந்து காலி செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புவனேஷன் நடத்தி வந்த கடையை காலி செய்து விட்டு காய்கறி வியாபாரம் செய்வதற்காக சீனிவாசன் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. தற்போது சீனிவாசனுக்கு பின்பு உக்கிரபாண்டியன் என்பவர் அதே இடத்தில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்களை நன்கு தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் மனுதாரர் டிரஸ்டில் நிர்வாக உறுப்பினராக இருந்து வந்தேன். அதனால் எனக்கு டிரஸ்டின் விதிமுறைகள் தெரியும்.

12. எதிர்மனுதாரரும் நானும் இறைச்சி கடை நடத்தி வருவதால் எதிர்மனுதாரர் எனக்கு போட்டியாக கடை நடத்தி வருவதை காலி செய்ய வேண்டும் என்பதற்காக நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.